# Glossary List

[Created by Anakbayan Scarborough, Chinese Canadian National Council Toronto Chapter, Tamil Canadian Centre for Civic Action]

**காலனி ஆதிக்கம் (Colonization)** - ஒரு நிலப்பகுதியையோ அங்கு வாழும் குடிமக்களையோ தமது கூடிய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கத்துடன் அவர்களின் உடைமை பறித்தல், வன்முறைகள் அல்லது வேறு வழிகள் மூலமாகத் தமது ஆதிக்கத்தையும் இருப்பையும் நிலை நாட்டுவதற்கான பொறிமுறையாகும். நிர்வாக அமைப்புகளுக்குள்ளும் நிறுவனங்களுக்குள்ளும் (எடுத்துக்காட்டு: அரசாங்கம், சட்டங்கள், கொள்கைகள்) தமது இருப்பை வேரூன்றச் செய்வதனால் ஆதிக்கத்தை ஏற்படுத்தவும் நிலை நிறுத்தவும் முடியும்.

**இனப்படுகொலை (Genocide)** - குறிப்பிட்ட ஒரு தேசம் அல்லது இனக் குழுவிலிருந்து (அந்தத் தேசத்தை அல்லது இனக் குழுவை அழிக்கும் எண்ணத்துடன்) பெரும் எண்ணிக்கையிலான மக்களைத் திட்டமிட்டுக் கொன்றொழிப்பது.

**நில அங்கீகரிப்பு (Land acknowledgement)** - நாங்கள் இப்போது இருக்கும் நிலம், முன்னதாகப் பூர்வ குடிகளுக்குரிய நிலமாக இருந்தது என்பதை அங்கீகரித்துப் பெரும்பாலும் ஒரு நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் கூறப்படும் ஒரு அறிக்கை வரைவாகும். நில அங்கீகரிப்புச் செய்யும்போது அது, அந்த நில அங்கீகரிப்பை ஏன் செய்கின்றோம் என்பதைப் பிரதிபலிப்பதாகவும், பூர்வ குடிமக்களுக்கும் அவர்களது சமூகத்துக்கும் இன்று ஆதரவு அளிப்பதற்குச் சிறிதோ பெரிதோ ஏதாவது ஒரு செயற்திட்டத்தை சிந்திப்பதாகவும் இருக்கவேண்டியது இன்றியமையாதது.

**புரிந்துணர்வு (Reconciliation)** - குடியேற்ற வாசிகளுக்கும், நிறுவனங்களுக்கும், பூர்வ குடிச் சமூகத்துக்கும் இடையேயுள்ள உறவைச் சீர்படுத்துவது. பூர்வகுடி மக்கள் மீது இழைக்கப்பட்ட தீமைகளைச் சீரமைக்கும் வகையில் குடியேறியவர்களாலும், நிறுவனங்களாலும் பாரிய வேலைகளை மேற்கொள்வதுதான் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்குத் தேவையாக இருக்கிறது.

**குடியேற்றக் காலனி ஆதிக்கம் (Settler colonialism)** - இது பூர்வகுடி அல்லாத மக்கள் (குடியேற்ற வாசிகள் என அழைக்கப்படுபவர்கள்) இப்பொழுதிருக்கும் பூர்வ குடியினருக்குரிய நிலத்தை ஆக்கிரமித்து அங்கு வாழ்வதற்காகத் தொடர்ந்து மேற்கொள்ளும் உடைமைப் பறிப்பு, வன்முறைகள், மேலாதிக்கம் ஆகிய செயற்பாடுகளைக் குறிக்கும். இப்போதிருக்கின்ற பூர்வகுடி மக்கள் தொகையை தங்கள் மக்கள் தொகையால் மாற்றியமைத்துப் பூர்வகுடி மக்களின் நிலங்களை நிரந்தரமாக ஆக்கிரமித்துக் கொள்வதுதான் குடியேற்றக் காலனி ஆதிக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

**சமூகம் (Community)** - உடன் இருப்பவருடனான பிணைப்பு அல்லது ஒருமைத்துவ உணர்வு (அனேகமாக குடும்பம், அல்லது வாழும் நிலப் பகுதி ரீதியாகப் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒற்றுமைப் பண்புகள் காரணமாக)

***ஒன்றுசேர்ந்த நடவடிக்கை (Collective action)*** - ஒரு குழுவைச் சேர்ந்த மக்கள் தங்கள் குழுவின் நிலையை மேம்படுத்த அல்லது ஒரு பொது இலக்கை எட்டுவதற்காக ஒன்றுபட்டு எடுக்கும் நடவடிக்கைகள் (சமூகத்தினூடாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் போல). ஓன்றுசேர்ந்த நடவடிக்கை ஒரு குறுகிய கால அல்லது பொது இலக்கை எட்டுவதற்காகவோ (மக்களுடைய குறுகிய கால உடனடித் தேவைகளை மேம்படுத்துவதற்கு உதவுதல்) அல்லது நீண்ட கால இலக்கை எய்துவதற்காகவோ (எடுத்துக்காட்டாகப் பாரிய நிர்வாகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதாக) எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள்.

***சமூகத்தைக் கட்டியெழுப்புதல் (Community building)*** - சமூகத்தை நன்கு புரிந்து கொள்ளவும், சமூகத்துடன் நன்கு தொடர்பாடவும் செயற்படுதல் (ஒன்றுபட்ட உணர்வை உருவாக்குதல்). எங்களை ஒன்றுபடுத்தக் கூடிய விடயங்கள் (எடுத்துக்காட்டு: பயிற்சிப் பட்டறை, நிதி சேகரிப்புப் போன்றவை) மூலம் இதனை ஏற்படுத்தலாம்.

***சமூக ஒழுங்கமைப்பு (Community Organizing)*** - சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான செயதுற் திட்டங்களை உருவாக்குவது. சமூக ஒழுங்கமைப்பு (~உங்களது சமூகம்| என நீங்கள் அடையாளம் காணும்) ஒரு குழுவினருடன் சேர்ந்து (எமது சமூகத்திலுள்ள மிகவும் ஓரங்கட்டப்பட்ட சமூகம் உட்பட எம்மெல்லோருக்கும் ஆதரவளிப்பதற்கும், மேம்படுத்துவதற்குமான) ஒரு பொது நோக்கை எய்துவதற்காகச் செயலாற்றுவதாகும். எடுத்துக்காட்டாக ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்வது, அரசியல் அணிகளை உருவாக்குவது, நிர்வாகக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்துவது போன்றவை.

***சமூக ஆற்றல் (Community power)*** - நாங்கள் ஒன்றாகி வலிமையுடன் நிற்கிறோம் என்ன்னும் எண்ணம்.

**வல்லாண்மை மேலாதிக்கம் (Imperialism)** - ஒரு நாடு தன்னுடைய அரசியற் பலத்தை விரிவுபடுத்தி அரசியல், பொருளாதார லாபத்துக்காக மற்ற நிலங்கள் மேல் ஆதிக்கத்தைச் செலுத்துவது. இது அனேகமாக அரச தந்திரோபாயத்தின் மூலமாக (சர்வதேச நாடுகளின் உறவுடன்) அல்லது இராணுவ சக்தியுடன் அனேகமாக வட பூகோளத்திலுள்ள செல்வந்த நாடுகளின் லாபத்த்துக்காகச் செய்யப்படுவது. வல்லாண்மை மேலாதிக்கம் தென் பூகோளத்திலுள்ள நாடுகளையும், மக்களையுமே பெரிதும் பாதித்திருக்கிறது.

**ஏற்றத்தாழ்வுகள் ஊடறுத்தல் (உட்பிரிவு நிலை) (Intersectionality)** - ஒருவருடைய சமூக அரசியல் அடையாளங்கள் சேர்ந்து எவ்வாறு வெவ்வேறு வழிகளில் பாகுபாட்டையும் சலுகைகளையும் உருவாக்குகின்றன என்பதை விளங்கிக் கொள்வதற்கான ஒரு சட்டகக் கட்டமைப்பு. அடையாளங்கள் என்பது இனம், பாலினம், சமூகப்பிரிவு போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். (எமது அடையாளங்கள் இவைதான் என நாமாக விவரணம் கொடுக்காவிட்டாலும். சமூகத்தில் இவை எமது அடையாளங்களை வடிவமைப்பதாக இருக்கின்றன.)

> ***வர்க்க வேற்றுமை (Classism)*** - ஒருவருடைய சமூகப் பிரிவின் அடிப்படையில் அல்லது ஒருவருடைய சமூகப் பிரிவு இதுவாகத்தான் இருக்கலாம் என்னும் எண்ணத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டுதல்.
>
> ***இனக்குழுமத்துவம் (Ethnicity)*** - பண்பாட்டுப் பின்னணியில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றவற்றை அடிப்படையாகக் கொண்ட அடையாளக் காரணிகள்.
>
> **இனம்சார் அடையாளம் (Ethnoracial Identity)** - இனம், மனிதக்குழு ஆகிய அடையாளங்களால் குறிக்கப்படும் ஒருவருடைய அடையாளத்தை விளக்கும் சொற்பதம்.

**புலப்பெயர்வு (Migration)** - ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு இடம்பெயர்தல் (பெரும்பாலும் உள்ளக இடப்பெயர்வு, அதாவது ஒரு நாட்டுக்குள்ளேயே)

> ***அடைக்கலம் நாடுவோர் (Asylum seeker)*** - தமது தாயகத்தை விட்டு வெளியேறி இன்னொரு நாட்டில் (அந்த நாட்டில் தமது பாதுகாப்புக்காக) புகலிடம் தேடுபவர்கள். அடைக்கலம் நாடுவோர் அகதிகளாகச் சட்டப்படி அங்கீகரிக்கப்படாதவர்கள் ஆனால் புகலிடக் கோரிக்கைக்கான (பாதுகாப்புக் கோரிக்கைக்கான) முடிவை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்கள்.
>
> ***குடியகல்வு (Emigration)*** - வேறொரு நாட்டில் நிரந்தரமாகக் குடியேறி வாழ்வதற்காகத் தனது நாட்டை விட்டு வெளியேறுதல்.
>
> ***குடிவரவு (Immigration)*** - பிற நாடொன்றுக்கு (தனது சொந்த நாடல்லாத வேறொரு நாட்டுக்கு) நிரந்தரமாக வாழ்வதற்காக வந்து சேர்வது.
>
> - ***குடிவரவாளர் (Immigrant)*** - பிற நாடொன்றுக்குக் குடி பெயர்ந்தவர்.
>
> ***அகதி (Refugee)*** - தனது சொந்த நாட்டில் தனக்கு மிகக் கடுமையான மனித உரிமை மீறல்களும் துன்புறுத்தல்களும் ஏற்படுடக் கூடிய ஆபத்து இருக்கிறது என்னும் காரணமாக அந்நாட்டிலிருந்து (வெளிறேத் தூண்டப்பட்டு) வேறு வழியின்றி வெளிநாடொன்றுக்குப் பாதுகாப்புத் தேடித் தப்பிச் சென்றவர்.

**இனவாதம் (Racism)** - வல்லமைகளையும், பரம்பரை வழியாக வரும் தனிப் பண்புகளையும் ஒரு இனம்தான் அடிப்படையாகத் தீர்மானிக்கின்றது என்றும் அதனால் பிறப்பில் அல்லது இயற்கையாகவே ஒரு குறிப்பிட்ட இனத்திடம் (அனேகமாக வெள்ளை இனம்) உயர்வு காணப்படுகிறது என்றும் ஒரு நம்பிக்கை. இந்த நம்பிக்கை ஒரு இனம் மற்ற இனத்தைவிடச் சலுகைகளை எடுத்துக்கொள்வதையும், மற்ற இனத்தின் மீது பாகுபாடுகளும் அநீதிகளும் இழைக்கப்படுவதையும் நியாயப்படுத்துகிறது.

***ஆசிய நாட்டவர்களுக்கு எதிரான இனவாதம் (Anti-Asian Racism)*** - ஆசிய இனத்தவர்களுக்கு எதிராகத் தொடர்ந்து இழைக்கப்படும் பாகுபாடாக நடத்தப்படுதல், முற்சார்புத் தப்பெண்ணம், பக்கச் சார்பு ஆகியவை. இதனால் ஆசிய இனம் பாகுபாடு, வேற்றுமை, ஓரங்கட்டப்படுதல், வாய்ப்புகளை இழத்தல் ஆகியவற்றை எதிர்கொள்வதும் அனுபவிப்பதும் நிகழ்கிறது.

***கறுப்பருக்கெதிரான இனவாதம் (Anti-Black racism)*** - ஆபிரிக்காவை அல்லது கறுப்பினத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இனத்தவர்களுக்கு எதிராக, அவர்களது தனித்துவமான அடிமைப் படுத்தப்பட் வரலாற்றிலும் அதன் தொடர்ச்சியிலும் வேர்கொண்டதாக, அவர்கள் மீது தொடர்ந்து இழைக்கப்படும் பாகுபாடு, முற்சார்புத் தப்பெண்ணம், பக்கச்சார்பு ஆகியவை. இதனால் கறுப்பு இனம் பாகுபாடு காட்டப்படுதல், ஓரங்கட்டப்படுதல், நேர்மையற்ற முறையில் நடத்தப்படுதல், வாய்ப்புகளை இழத்தல் ஆகியவற்றை எதிர்கொள்வதும் அனுபவிப்பதும் வெளிப்படையாகக் காணப்படுகிறது.

***பூர்வகுடி மக்களுக்கெதிரான இனவாதம் (Anti-Indigenous racism)*** - கனடாவிலுள்ள பூர்வகுடி இனத்தவர்களுக்கு எதிராக, அவர்களது வரலாற்று ரீதியான காலனி ஆதிக்கமும் அதன் தொடர்ச்சியும் வேரூன்றியுள்ளதன் காரணமாகத் தொடர்ந்து வரும் குடியேற்றக் காலனித்துவம் உட்பட, அவர்கள் மீது தொடர்ந்து இழைக்கப்படும் பாகுபாடு, முற்சார்புத் தப்பெண்ணம், பக்கச்சார்பு, அநீதி ஆகியவை. பூர்வகுடி மக்களுக்கு எதிரான இனவாதம். இது இனப்பாகுபாடு காட்டப்படுதல், ஓரங்கட்டப்படுதல், வாய்ப்புகளை இழத்தல் ஆகியவற்றை அவர்கள் அனுபவிப்பதன் மூலம் வெளிப்படையாகத் தெரிகிறது.

***ஒருதலைச் சார்பு (Bias)*** - (ஒரு காரணத்தின் அல்லது அனுபவத்தின் அடிப்படையிலல்லாது முன்னுருவான அபிப்பிராயத்தின் அடிப்படையில்) ஒருவருக்கு அல்லது ஒரு குழுவுக்குச் சார்பாகவும் இன்னொருவருக்கு அல்லது இன்னொரு குழுவுக்கு எதிராகவும் இயங்குதல்.

***பிரித்துணர்தல் (Discrimination)*** - இனம், வயது, பால், வல்லமை போன்றவற்றின் அடிப்படையில் மக்களை நீதியற்ற முறையில் அல்லது பாகுபாடாக நடத்துதல்.

***உள்ளகப்படுத்தப்பட்ட இனவாதம் (Internalized racism)*** - (பெரும்பாலும் ஓரம் கட்டப்பட்ட சமூக அல்லது சமூகப் பின்னணி கொண்ட) தனி மனிதர்களுக்கிடையே தோன்றும் ஒருவகை இனவாதம். மக்கள் தங்களுக்கு எதிராகச் சமூகம் வைத்திருக்கும் கெடுதியான பாகுபாடுகளையும், தப்பெண்ணங்களையும் நம்பி அதன்படி செயல்படத் தொடங்குவதன் பயனாக அவர்களிடம் சுயசந்தேகம், சுயமதிப்பிழத்தல், எதிர்மறைச் சுழற்ச்சி ஆகியவை விளைகின்றன.

***ஆட்களுக்கிடையேயான அல்லது தனிநபர் இனவாதம் Interpersonal / Individual racism)*** - இன அடிப்படையிலான பாகுபாடு, தப்பான தகவல்கள், இனத்தின் மீதான தப்பெண்ணம் போன்றவற்றை அறிந்து கொண்டதால் தனி மனிதர்களுக்கிடையே நடைபெறுகின்ற உரையாடல்களில் ஒருவரை நோக்கிய இன்னொருவரது நடத்தை அமைந்து கொள்வது. இவ்வாறான நடத்தைகள் ஒளிவு மறைவின்றி வெளியே தெரிவதாகவோ அல்லது மறைமுகமாகவோ தற்செயலாக நடைபெறுவதாகவோ இருக்கலாம். ஆனால் அவை பாதிப்பை ஏற்படுத்த வல்லன.

- ***நுண்மோதல் போக்கு (Microaggression)*** - பெரும்பாலும் பொது இடங்களில் வேண்டுமென்றோ அல்லது தற்செயலாகவோ குறுகிய அளவில் வாய்மொழியால் அல்லது நடத்தையால் வெளிப்படுத்தப்படும் இனவாத மோதல் போக்கு. இது பகையான, சிறுமைப்படுத்துகின்ற, எதிர்மறையான செயலாகவும் ஒரு இனக்குழு, இனம், வயது, பாலினம், வல்லமை, சமூக பொருளாதார நிலை ஆகியவை தொடர்பானதாகவும் இருக்கும்.

***ஓரங்கட்டுதல் (Marginalize)*** - ஒரு தனி மனிதனோ அல்லது குழுவோ செயலாற்றும் திறமை குறைந்திருந்தால், அல்லது அடிப்படைச் சேவைகளையோ அல்லது வாய்ப்புகளையோ பெறுவதில் இயலாமை இருந்தால், அல்லது மாற்றங்களுக்கான தாக்கங்களை ஏற்படுத்துவதில் வல்லமை குறைந்திருந்தால், அல்லது சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வில் முற்றாக ஈடுபடமுடியாதிருந்தால் நிகழ்வது.

***அடக்குமுறை (Oppression)*** - மற்றவர்களைப் பாதிக்கும் வகையில் ஒரு குழு கூடிய அதிகாரத்தையும், செல்வாக்கையும், வளங்களையும் வைத்துப் பேணுவதற்காக அனுமதிக்கப்படும் (திட்டமிடப்பட்ட இனவாதம் எனப்படும்.) ஒரு கட்டமைக்கப்பட்ட நடைமுறையாகும். (Icarus Project 2015, p. 6)

- ***அடக்குமுறையான (Oppressive)*** - ஒரு குழுவினர் அதிகரித்துச் செல்லும் அளவிலான அதிகாரம், செல்வாக்கு, வளங்கள் ஆகியவற்றை பெறுகின்ற வகையில் கொரூரமான. நீதியற்ற பாகுபாடான செயல்களிலிருந்து ஒரு அநீதியான கட்டமைப்பு உருவாகும்போது.

***சலுகைகள் (Privilage)*** - மக்களோ ஒரு குழுவோ தமது இனம், இனக்குழு, வயது, பாலினம், வல்லமை, சமூகப் பொருளாதார நிலை போன்றவை காரணமாகப் பிறப்பால் பெற்றிருக்கின்ற அனுகூலம்.

***புறவுருவிடல் (இன அல்லது இனக்குழுமப் புறவுருவிடல்) (Profiling)*** - ஆதாரமின்றி அல்லது முறையான ஐயப்பாடு இல்லாமல், ஒருவருடைய தோற்றம், இனம், மதம், குடியுரிமை போன்றவற்றின் அடிப்படையில் ஒருவருக்கு எதிராக சந்தேகப்படுதல், தண்டனைக்கு இலக்காக்குதல், பாகுபாடாக நடத்துதல்.

- அனேகமாக இது சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர்களால் பயன்படுத்தப்படுகின்ற செயல்முறையாகும்.

***இனக்குழு (Race)*** - மூதாதையர் மரபுவழி, தேசியத் தோற்றுவாய், உடற்கூற்றுப் பண்புகள் ஆகியவற்றால் பொதுவாக அடையாளப்படுத்தப்படுகின்ற சமுதாயக் கட்டமைப்பிலுள்ள ஒரு குழு.

***தப்பபிப்பிராய வகைப்படுத்துதல் (Stereotype)*** - குறிப்பிட்ட ஒருவரை அல்லது ஒரு குழுவைப்பற்றிப் பரவலாக அல்லது நிலையாக வைக்கப்பட்டுள்ள, அளவுக்கதிகமான எளிமையாக்கப்பட்ட ஒரு கருத்து அல்லது பிம்பம்.

***திட்டமிடப்பட்ட இனவாதம் (Systemic racism)*** - இனக்குழுக்களின் அடிப்படையில் பொருளாதாரம், சமூகம், அரசியல் நிறவனம், நிர்வாகக் கொள்கைகள், நடைமுறைகள் ஆகியன மக்களுக்கு நீதியற்ற அநுகூலங்களை, அல்லது தீமைகனை உண்டாக்கக் கூடியதாக உள்ள கட்டமைப்பு வழிமுறைகள்.

**கூட்டு ஒருமைப்பாடு (Solidarity)** - மேலெழுந்தவாறு இல்லாமல் ஒருதலைச் சார்பு பற்றி அறிந்து கொள்வதை உள்ளடக்கியதாகப் பல வேலைகள் தேவையாக உள்ள ஆதரவையும் அனுதாபத்தையும் காட்டுவது. நீதியற்ற நடைமுறைகளை மாற்றுவதுதான் கூட்டு ஒருமைப்பாட்டின் நோக்கமாகும்.

***வேற்றுமைப் பண்பு, சமவாய்ப்பு, உட்படுத்தல் (Diversity, Equity and Inclusion - DEI)*** - வெவ்வேறு இனங்கள், இனக்குழுக்கள், மதங்கள், வல்லமைகள், பாலினங்கள் போன்றவை சார்ந்த மக்களுக்கு ஆதரவளிப்பதற்காக அனேகமாக ஒன்று சேர்க்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட மூன்று விழுமியங்கள்.

- ***வேற்றுமைப்பண்பு (Diversity)*** - ஒவ்வொருவரதும் தனித்த அடையாளங்கள் பிரதிபலிக்கப்படுவதை அங்கீகரிப்பதும், பெறுமதியாகக் கொள்ளும் நோக்கமுடையதுமாகும்.
- ***சமவாய்ப்பு (Equity)*** - எல்லா மக்களும் சமமாக நடத்தப்படவேண்டும் என்பதையும். சிலவேளைகளில் சமமான

நடவடிக்கைகள் நீதியற்றவை என்பதையும் அங்கீகரிப்பதைக் குறிக்கும்.

- ***உட்படுத்தல் (Inclusion)*** - ஒவ்வொருவரும் முழுமையாக உள்வாங்கப்பட்டுள்ளார் என்பதையும், கருத்தோடு கூடிய பங்களிப்பை செய்கின்றார் என்பதையும் உறுதிப்படுத்துவதற்குச் செய்யப்படும் மாற்றங்களைக் குறிக்கிறது.

***பன்முகப் பண்பாட்டியம் (Multiculturalism)*** - வெவ்வேறுபட்ட இன, பண்பாட்டு, இனக்குழுப் பின்னணி கொண்டவர்கள் எல்லோரும் அவரவர் வேற்றுமைகளைக் கொண்டாடவும், மேம்படுத்தவும் சமமான உரிமைகளையும், வாய்ப்புகளையும் ஆதரிப்பதாகக் கொள்கை அளவில் கனடாவில் உள்ள கோட்பாடாகும். பன்முகப் பண்பாட்டியம் வேறு வேறு இன, பண்பாட்டுப் பின்னணி கொண்ட மக்களுக்கு வெவ்வேறு விதமாக செயற்படுத்தப்படுவதை நடைமுறையிலே காண முடிகிறது.

***இனங்களுக்கான நீதி (Racial justice)*** - எல்லா இனங்களும் சமமான வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அதனால் ஏற்படும் சமமான பயன்களை அடைவதற்கும் நிர்வாக அமைப்பு மட்டத்தில் சமமாக நடத்தப்படுவதை அழுத்தமாகத் தெரிவிப்பது.

***சமூக நீதி (Social justice)*** - ஒரு சமுதாயத்தில் செல்வங்களையும், வாய்ப்புகளையும், சலுகைகளையும் பகிர்ந்தளிப்பதில் எல்லோருக்கும் சமவாய்ப்பை அளிப்பதற்கும் அதனால் எல்லோரும் சமமான பயனை அடைவதற்கும் நிர்வாக அமைப்பு மட்டத்தில் சமமாக நடத்தப்படுவதை அழுத்தமாகத் தெரிவிப்பது.

## ஆசிய இனத்துக்கு எதிரான இனவாதத்தின் அனுபவங்கள்.

**தொழில்துறைமைத்துவம் இழக்கச் செய்தல், தகுதிக்குக் கீழான வேலை (Deskilling/deprofessionalization and underemployment )** - குடிவரவரவின் போது குடிவரவாளர்களின் தொழில், கல்வி தொடர்பான சான்றிதழ்கள் அங்கீகரிக்கப்படாததால் வாழ்வாதாரத்துக்காக அவர்களது தொழில்துறை நிபுணத்துவத்துவத்துக்குக் கீழான தொழில்களில் ஈடுபடும் நிலை.

**குடும்பப் பிரிவு (Family separation)** - ஒருவரிடமிருந்து குடும்ப உறுப்பினர்கள் குறிப்பாக அவரது பிள்ளைகள், குடும்பத் துணை, அவரில் தங்கியுள்ள முதியோர் ஆகியோர் அரசியல், சமூக, பொருளாதார வழிகளால் பிரிக்கப்படும் செயல்முறை.

***குடும்பத்தை மீள் ஒன்றுபடுத்தல் (Family reunification)*** - அரசியல், சமூக, பொருளாதார வழிகளால் ஒருவரிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்த குடும்ப உறுப்பினர்களைக் குறிப்பாக அவரது பிள்ளைகள், குடும்பத் துணை, அவரில் தங்கியுள்ள முதியோர் ஆகியோரை (உடல் ரீதியாக) ஒன்றுபடுத்தும் செயல்முறை.

***தொழில் ஏற்றுமதிக் கொள்கை (Labour export poloicy)*** - அதிக வாய்ப்புகளுக்காகக் குடும்பத்தை விட்டுவிட்டு பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து வலிந்து தூண்டப்படும் புலப்பெயர்வு.

**உடன் வாழும் பராமரிப்பாளர் செயற்திட்டம் - (Live-in Caregiver Program)** - பராமரிப்பாளராக அல்லது ஆயாவாக வேலை செய்வதற்குக் கனடியக் குடியுரிமையுள்ளவரோ அல்லது நிரந்தர வதிவுரிமை பெற்றவரோ கிடைக்காத பட்சத்தில் அந்த வேலையைச் செய்வதற்குக் கனடாவில் ஒரு தனியார் வேலை அமர்த்துநருடன் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் தகுதியுடையவராக்கும் கனடாவிலுள்ள பழைய குடிவரவு வழித்தடம். பணியாளர்கள் மீதான பரவலான துஷ்பிரயோகம் போன்ற பல சிக்கல்கள் இந்த செயற்திட்டத்தில் காணப்பட்டதால் அச்செயற்திட்டம் நிறுத்தப்பட்டுத் தற்காலிக வெளிநாட்டு வேலையாளர்கள் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

***வெளிநாட்டு பிலிப்பினோ பணியாளர் (Overseas Filipino Worker - OFW)*** - அனேகமாகக் குறுகியகாலத்துக்கு வேலைக்கமர்த்தப்பட்டு பிலிப்பைன்ஸ்க்கு வெளியே வசித்துத் தொழில்புரியும் பிலிப்பினோக் குடிவரவுப் பணியாளர்களைக் குறிப்பது. இவ்வாறு தொழில் புரியும் இப்பணியாளர்களது முக்கிய இடங்களாகக் கனடா, ஹாங்ஹாங், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமரேட் ஆகிய நாடுகள் உள்ளன.

***தற்காலிக வெளிநாட்டு வேலையாளர்கள் செயற்திட்டம் (Temporary Foreign Worker Program)*** - கனடாவிலுள்ள வேலைக்கமர்த்துவோர் தற்காலிகப் பணியிடங்களுக்குத் தகுதிவாய்ந்த கனேடியர்கள் கிடைக்காதபோது அவ்விடங்களை நிரப்புவதற்காக வெளிநாட்டுப் பணியாளர்களை வேலைக்கமர்த்துவதற்கு அனுமதிக்கும் கனடாவின் குடிவரவு வழித்தடமாகும். இப்பணியாளர்கள் வேண்டிய உரிமைகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் உரிமையுடையவர்கள் என்றாலும் இச்செயற்திட்டத்தின் கீழ் பரவலான துஷ்பிரயோகம், தவறாக நடத்தப்படுதல் ஆகியவற்றிற்கான முறைப்பாடுகள் பரவலாகக் காணப்படுகின்றன.

- தற்காலிக வெளிநாட்டு வேலையாளர்கள் செயற்திட்டத்தின் கீழ் வேலைக்கு எடுக்கப்படுபவர்களைப் பராமரிப்பாளர்கள், பருவகாலத்துக்கேற்ற விவசாயப் பணியாளர்கள் போன்ற வேலைகளுக்கு அமர்த்தலாம்.

**மாதிரிச் சிறுபான்மைப் புனைவுக்கதை (Model minority Myth)** - முறையீடு செய்வதற்குப் பதிலாகத் தமது கடின உழைப்பாலும் தமக்கே உரிய வழிகளாலும், வெற்றியடையலாம் என்பதற்கு ஆசிய நாடுகளிலிருந்து வரும் மக்கள் இனவாதத்துக்குள்ளாக்கபட்ட மற்றைய மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றார்கள் என்னும் கருத்து. இக்கருத்து திட்டமிடப்பட்ட இனவாதத்தின் (மக்களை அடக்குமுறைக்கு உள்ளாக்கி அவர்களை வெற்றிபெற இயலாதவர்களாகச் செய்கின்ற நிர்வாக அமைப்பின்) யதார்த்ததைத் தட்டிக்கழிப்பதாகவும் பலரது வாழ்க்கை அனுபவங்களை மறைப்பதாகவும் உள்ளது.

**நிலையான வெளிநாட்டவர் (Perpetual Foreigner)** - சட்டப்படியான, தலைமுறை வழியான, பண்பாட்டு ரீதியான அந்தஸ்த்து இருந்தபோதிலும், சீன நாட்டவர்களும் (மற்றைய நாட்டவர்களும்) அன்னிய நாட்டவர்களே, அவர்கள் கனேடியர் அல்ல என்னும் மனப்பான்மை. இந்த மனப்பான்மை ஆசிய மக்கள் தங்களது இனம், இனக்குழுமம் காரணமாக எப்பொழுதும் கனடாவுக்கு விசுவாசமாக இருக்க மாட்டார்கள் என்னும் எண்ணத்தோடு இணைந்ததாகும்.

**மஞ்சள் இடர்நிலை (Yellow Peril)** - கிழக்காசிய, தென்கிழக்காசிய மக்கள் கனடாவுக்கும், கனடிய சமுதாயத்தின் நலனுக்கும் ஒரு ‘அச்சுறுத்தலாக’ உள்ளார்கள் என்னும் தப்பெண்ணத்தில் அவர்களுக்கு எதிராக வேற்றுமையை நியாயப்படுத்துதல், தப்பாக நடத்துதல், தப்பபிப்பிராய வகைப்படுத்துதல், அநீதி இழைத்தல் ஆகியன. அனேக நேரங்களில் கிழக்காசிய, தென்கிழக்காசிய நாட்டவர்கள் அழுக்கானவர்கள், கொடுமையானவர்கள், பிற்போக்கானவர்கள், அன்னியர், நோய்களோடு தொடர்புடையவர்கள், ஒழுக்கக் கேடானவர்கள் என்றெல்லாம் அச்சுறுத்தலாகக் கருதப்படுகிறார்கள்.